DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.15/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 2 | நாள் | : | 17.07.2025 |
| பெயர் | : | கணேசன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 17th day of July 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் தற்போது சிவகிரியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். வேலு என் பெரியப்பா மகன். அவருக்கு ஒரு மகனும், இரண்டு மகள்களும் உண்டு. அவரது மகன் பெயர் சுப்பிரமணியன். 09 ம் தேதி ஒரு நாள் 2014 ம் ஆண்டு மார்கழி மாதம் உரம் கொண்டு சென்றுள்ளார். விடியற்காலம் 7 மணியளவில் சுப்பிரமணிக்கு போன் போட்டால் எடுக்கவில்லை வயலுக்கு போனவரை காணவில்லை என்று சொன்னார். வேலு வயலுக்கு அருகிலேயே எனக்கும் வயல் உள்ளது. நானும், வேலுவும், அ.சா.1ம் சுப்பிரமணியை தேடிச் சென்றோம். விஜயரங்கப்பேரி என்ற இடத்தில் நிலம் உள்ளது. கணேசன் என்பவருடைய காட்டில்

நெல் களைந்து கிடந்தது. கணேசன் நிலம் எங்கள் காட்டிற்கு வடக்கே உள்ளது. அருகிலேயே உரம் மூடை உடைந்து கிடந்தது. சுப்பிரமணியை காணவில்லை. பின்னர் வேலு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். புகார் கொடுத்த பின்னர் அந்த இடத்தில் வந்து தேடினோம். ஆனால் சுப்பிரமணி ராஜன் என்பவருடைய கரும்பு தோட்டத்தில் கிடந்தார். அங்கு அவர் இறந்து கிடந்தார். அவர் கரண்ட் அடித்து இறந்து கிடந்ததாக காணப்பட்டது. அப்போது மதியம் 1 மணி இருக்கும். அப்போது போலீசார் வந்துவிட்டார்கள். காட்டுக்காரர் சுப்பிரமணியை தூக்கிப்போட்டிருப்பார்கள். அவரை தொட்டில் கட்டி பாதைக்கு கொண்டு வந்தோம். அங்கு ஆம்புலன்ஸ் வந்தது. அங்கிருந்து மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். பின்னர் மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனையில் வைத்து போலீசார் பிரேத விசாரணை நடத்தியபோது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் கு.வி.**

நான் தற்போது கூறிய விவரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன். வேலு காட்டுக்கு அருகில் எனது காடு உள்ளது என்று போலீசாரிடம் கூறவில்லை. நான் தளவாய்புரத்தைச் சேர்ந்த முதலியார் ஒருவருடைய தோட்டத்தை விவசாயம் செய்து வருகிறேன். என் தந்தை காலத்திலிருந்தே நாங்கள்தான் வயலை அனுபவித்து வருகிறோம். எனக்கு அங்கு எந்த இடமும் இல்லை என்றும் நான் தற்போது போலீசார் கேட்டுக் கொண்டதால் அந்த இடத்தில் எனக்கும் விவசாய நிலம்

உள்ளதாகவும் தளவாய்புரத்தைச் சேர்ந்தவருடைய வயலை அனுபவித்து வருவதாக சொன்னால் சரியல்ல. வேலு என்பவருக்குமே அங்கு எந்த நிலமும் இல்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை. 11 மணிக்கு போனார் ஆனால் நான் காவல் நிலையம் செல்லவில்லை. என்னை சம்பவ இடத்திலும், பின்னர் மருத்துவமனையிலும் வைத்து விசாரித்தார்கள் அதன்பின்னர் விசாரிக்கவில்லை. நாங்கள் போலீசார் வரும் முன்பே பிரேதம் கிடந்த இடத்தில் இருந்தோம். வேலுவும், அவரது மகனும் காட்டு விலங்குகளை பிடிப்பதற்கு அந்த பகுதி நில உரிமையாளர்களின் மின் இணைப்பிலிருந்து அந்த வயல் உரிமையாளருக்கு தெரியாமலேயே மின் கம்பி வேளி அமைத்து காட்டு விலங்குகளை பிடித்து வருவதை வழக்கமாக கொண்டிருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கணேசன் இடத்தை நெல் பயிர் களைந்து கிடந்ததாகவும், உர மூட்டை கிடந்ததாகவும் நான் அதை வேலுவுடன் சென்று பார்த்ததாகவும் கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனக்கு அங்கு இடமேயில்லை என்றும் நான் அங்கு செல்ல வேண்டிய அவசியமேயில்லை என்று சொன்னால் சரியல்ல. சுப்பிரமணியன் எனக்கு உறவினர் என்றும் அதனால் அ.சா.1 மற்றும் வேலு கேட்டுக் கொண்டதன்பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை ஒருபோதும் விசாரித்ததில்லை என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதன்பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.17 17:36:00 +0530